[12th November 1965

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. பி. முருகையன் : சர்க்காரில் நடத்துகிற உயர் நிலைப் பள்ளிகளில் வேலை செய்கிற தொழில் ஆசிரியர்களுக்கும், மாவட்ட மன்ற பள்ளிகளில் வேலை செய்கிற தொழில் ஆசிரியர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு ஆசிரியர்களுக்கும் ஒரே தகுதி இருந்தும் வித்தியாசம் இருக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வித்தியாசம் ஒன்றும் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் நெசவு, தச்சு போன்ற வேலைகள் தேவையில்லை என்று சர்க்கார் ஏதாவது ஆணை பிறப்பித்திருக்கிறதா ? புதிதாகத் துவக்கப்படும் பள்ளிகளில் இப்படிப்பட்ட வகுப்புகள் துவக்கப் படவில்லை. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

ஆசிரியர்கள் சங்கங்கள்

* 494 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்கள் சங்கங்கள் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. பி. முருகையன் : ஆசிரியர்கள் சங்கங்கள் சர்க்காரிலே பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லி சில பஞ்சாயத்து மன்றங்களில் ஆசிரியர் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கிறார்கள். சில மன்றங்களில் கூட்டங்களை நடத்த அனுமதி மறுக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர் சங்கங்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, நிமித்தம் இல்லை. ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன என்றால் கூட்டங்களும் நடைபெறு கின்றன.

உயர்நிலைப் பள்ளிகள்

* 495 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) காம்பக்குடியில் உள்ள மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளிக்கு கிராண்ட் கோரி அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?